22nd March 1963]

திரு. கரு. சீமைச்சாமி : அந்த ஆஸ்பத்திரியின் நிர்வாகச் செல வுக்குப் பணம் இல்லாததால் கிழக்கு ராமநாதபுரம் பஞ்சாயத்து யூனியனிலிருந்து ஆண்டு தோறும் பணம் கொடுத்து வருகிறோம். அப்போதும்கூட அதை நடத்த முடியவில்லை. பிப்ரவரி மாதத் தில் தேவக்கோட்டையில் நடந்த டிஸ்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்ஸில் கூட்டத்தில்கூட இதை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானம் போட்டு அனுப்பியிருக் கிறோம். அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ததா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : நான் முதலிலேயே சொன்ன மாதிரி அது கொஸ்தினுக்குப் பிறகு தான் வந்திருக் கிறது.

MR. SPEAKER : The question alone is the first information.

சுவாமி விவேகாநந்தருக்கு சிலை நிறுவுதல்

* 328 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதி லளிப்பாரா—

(அ) சென்னைக் கடற்கரையில் சுவாமி விவேகாநந்தர் சிலையை நிறுவ உத்தேசமுண்டா ?

(இ) ஆம் என்றால், எப்பொழுது ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழாது.

திரு. முனு. ஆதி : தலைவர் அவர்களே, சமுதாயத்திலே நல்ல தொரு புரட்சி உண்டாக்கிய பெரியார் அவர்களுக்கு உருவச் சிலை அமைக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?

MR. SPEAKER : How does the question arise?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தக் கேள்விக்கும், இந்த உப கேள்விக்கும் என்ன சம்பந்தம் ?

கனம் சபாநாயகர் : நானே சொல்லி விட்டேனே அப்போதே.

Water-supply (Tiruchirappalli)

* 329 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) when the proposal to construct four over-head reservoirs for boosting water-supply in elevated areas in Tiruchirappalli Municipality was sanctioned;

(*b*) the details of the scheme, including the estimated cost; and

[22nd March 1963

(c) the present stage of the progress of the scheme?

THE HON. SRIMATHI JOTHI VENKATACHELLUM : (a) In November 1958.

(b) Improvements in the distribution of water-supply system for the Western and Southern areas of the Municipality and the construction of four Service Reservoirs for boosting water-supply in Palakarai, Worraiyur District I, Worraiyur District II and cantonment areas are being taken up, at an estimated cost of Rs. 31·58 lakhs.

(c) The work of construction of Service Reservoirs in Palakarai and Worraiyur District I is in progress. The Superintending Engineer has been asked to expedite the execution of the works.

Common irrigation wells (Ramanathapuram district)

*330 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any scheme to provide common irrigation wells in Ramanathapuram district ; and

(b) the present stage of the proposal to construct common irrigation wells in Thirupathur taluk, Ramanathapuram district?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes.

(b) Detailed proposals called for from the Collector of Ramanathapuram for sinking six community irrigation wells in Tiruppathur taluk as a Pilot Project are awaited.

(அ) ஆம்.

(இ) திருப்பத்தூர் தாலுக்காவில் முன்னோடித் திட்டமாக ஆறு பொது பாசனக் கிணறுகள் தோண்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது குறித்து விவரமாகத் திட்டம் தயாரித்து அனுப்பும்படி ராமநாதபுரம் ஜில்லா கலெக்டரைக் கேட்டிருக்கிறோம். அது இன்னும் கிடைக்கவில்லை.

திரு. சா. கணேசன் : இந்தப் பாசனத்திற்காகக் கிணறு தோண்டும் போது ஏரிகளின் உள்வாயிலே குழாய்க் கேணிகளை, ஆழக் கேணிகளை அமைப்பது பயன் உள்ளதாக இருக்கும் என்று அரசாங்கம் கருதுகிறதா? இது வரையில் இந்த மாதிரி யோசனை இல்லாவிட்டாலும் இந்த யோசனையை இப்பொழுதாவது சேர்த்துக் கவனிக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது அவர்கள் ஓரளவு பரிசீலனை செய்திருக்கிறார்கள். ரிப்போர்ட்தான் வரவில்லை. புறம்போக்கு இடத்தில்தான் வெட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். கண்மாயில் வெட்டினால் தண்ணீர் வரும்போது கிணறுகளில் மணல் மூடி, கிணறுகள் தூர்ந்துவிடும். ஏற்கெனவே பரிசீலனை செய்து